*[எல்லா விடைகளும் பாடப் பகுதியை ஒட்டியே அமைதல் வேண்டும்.]*

## பாகம் - ஒன்று

கீழ்க்காணும் மூன்று பிரிவுகளிலுள்ள எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்

## பிரிவு ஒன்று : கவிதை

கல்லார்க் கெல்லாக் காட்சியும் இருளே
இசைபெறு மொழியெலாம் ஏதோ உளரலே
மொழியையும் கலைபண் பாட்டையும் கண்டு
போலச் செய்தல் புறநிலை நடிப்பே!
அதனா லன்றோ ஆன்றோர் வள்ளுவர்
"கல்லார் விலங்கினோ லொப்ப"ரென் றோதினர்

- பாப்பா பாவலர் முனைவர் முரசு
நெடுமாறன்

1. இக்கவிதைக் கண்ணிகள் இடம்பெற்றுள்ள கவிதையின் **மையக்கரு** யாது?
(2 புள்ளி)

2. இக்கவிதை கண்ணிகளில் காணப்படும் **சிறப்புகளுள்** இரண்டனை எழுதுக.
(4 புள்ளி)

கல்லார்க் கெல்லாக் காட்சியும் இருளே
இசைபெறு மொழியெலாம் ஏதோ உளரலே
மொழியையும் கலைபண் பாட்டையும் கண்டு
போலச் செய்தல் புறநிலை நடிப்பே!

3. இவ்வடிகள் உணர்த்தும் **கருத்தை** விளக்குக. (4 புள்ளி)

[10 புள்ளி]

## பிரிவு இரண்டு : நாடகம்

4. கவிச்சக்கரவர்த்தி நாடகத்தில் இடம்பெற்றுள்ள **சமுதாயப் பின்னணி** ஒன்றனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

5. கவிச்சக்கரவர்த்தி நாடகத்தின் **துணைக்கருப்பொருள்** இரண்டனைக் குறிப்பிடுக. ( 2 புள்ளி)

6. கீழ்க்காணும் சூழலை வாசித்து, தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை தருக.

> "என் செய்யுட்களைவிட உம் செய்யுட்கள் சிறந்தவை என்று காட்டுவதற்காகத்தானே உத்தர காண்டத்தை இணைக்க எண்ணுகிறீர்? **இது நடவாத காரியம்**. நீரும் கலைமகளும் சேர்ந்து அவ்வாறு நிரூபிக்கவும் நிரூபிக்கலாம். ஆனால் உலகம் ஏற்காது!"
>
> அங்கம் 1, காட்சி 11, பக்கம் 85
> பாரி நிலையம் 2015

i) மேற்காணும் கூற்றில் இடம் பெற்றுள்ள **இருவர்** யாவர்? (2 புள்ளி)

ii) மேற்காணும் கூற்றைக் கூறுபவரின் இரண்டு **பண்புக்கூறுகளை** எழுதுக. (2 புள்ளி)

iii) இக்கூற்றைக் கூற நேர்ந்ததற்கான **காரணம்** யாது? (4 புள்ளி)

iv) '**இது நடவாத காரியம்'** எனும் சொற்றொடருக்குச் சூழலுக்கேற்ற பொருள் எழுதுக. (3 புள்ளி)

[15 புள்ளி]

## நாவல் : அகல் விளக்கு

7. அகல் விளக்கு நாவலின் **மொழிநடை** இரண்டனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

8. அகல் விளக்கு நாவலின் துணைக் கதாபாத்திரமான சந்திரன் **பிறந்த ஊரின்** பெயரைக் குறிப்பிடுக. ( 2 புள்ளி)

9. கீழ்க்காணும் சூழலை வாசித்து, தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை தருக.

> "பொறுப்பதால் பயன் இல்லையே; தங்கைக்கு வயது பதினெட்டு ஆகிவிட்டது. இனிமேல் பொருத்தால் மட்டும் நல்ல மாப்பிள்ளையாகக் கிடைப்பானா? வயது ஆக ஆக மாப்பிள்ளை வருவது குறையும். படிப்பும் பணமும் இருந்தால், அல்லது பணம் மட்டும் இருந்தால் சரி, முப்பது வயது வரையில் பொறுத்திருக்கலாம். வாழ்க்கையில் செல்வாக்கு இருந்தால், அதற்கு மேலும் பொருத்திருக்கலாம். **நம்மைப் போன்றவர்கள்** பொறுத்திருப்பதால் பயன் இல்லையே"
>
> அத்தியாயம் 21, பக்கம் 286
> பாரி நிலையம் 2015

i) மேற்காணும் கூற்றில் இடம் பெற்றுள்ள **இருவர்** யாவர். (2 புள்ளி)

ii) இக்கூற்றை கூறுபவரின் **இரண்டு** பண்புக்கூறுகளை எழுதுக. (2 புள்ளி)

iii) இக்கூற்றைக் கூற நேர்ந்தற்கான **காரணம்** யாது? (4 புள்ளி)

iv) **'நம்மைப் போன்றவர்கள்'** என்பதன் சூழலுக்கேற்ற பொருள் எழுதுக. (3 புள்ளி)

[15 புள்ளி]

## பாகம் – இரண்டு

கீழ்க்காணும் மூன்று பிரிவுகளுள் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு கட்டுரையாக **மூன்று** கட்டுரைகள் எழுதுக.

### பிரிவு ஒன்று : கவிதை

10. கீழ்க்காணும் கவிதையின் **கருத்துகளை** விளக்கி எழுதுக.

. **தமிழ்ப்பேறு! தவப்பேறு!**

தாய்மொழி என்பது தாயின் மொழி – அது
 தாயும் நீயும் பேசும் மொழி
ஆயிரம் மொழிகள் நீயறிந் தாலும்
 ஆன்மா உணர்மொழி அந்த மொழி – அது
 அன்னையின் கருவில் வந்த மொழி!

அன்னையின் மடியில் கிடக்கையிலே – அவள்
 அன்பினைப் பாலாய்க் குடிக்கையிலே
சின்னவுன் செவியில் சில்லெனப் பாய்ந்து
 தேனாய் இனித்திடக் கேட்ட மொழி – உன்
 சிந்தையில் விதைகள் போட்டமொழி!

தோளிலும் மார்பிலும் சாய்கையிலே – நீ
 தொட்டிலில் ஆடி ஓய்கையிலே
ஏழிசை மிஞ்சிடும் தாயிசை கேட்டே
 இதமாய்த் தூங்கிய பாடுமொழி – அது
 இதயங்கள் பேசிடும் வீட்டுமொழி!

அன்னையை அழைத்தே அழுகையிலே – அவள்
 அணைத்ததும் உடன்நீ சிரிக்கையிலே
தன்னிலை மறந்தே தாய்மனம் பொங்கித்
 தவிப்புடன் உன்னைக் கொஞ்சுமொழி – அது
 தரணியில் எதையும் மிஞ்சுமொழி!

தொல்லைகள் அறியாப் பருவத்திலே – நீ
 துருதுருத் தாடிய உருவத்திலே
பல்லுமில் லாமல் சொல்லுமில் லாமல்
 பலகதை சொல்லிய மயக்குமொழி – நீ
 பயிலுமுன் பேசிய இயற்கைமொழி!

உன்னுடன் இணைந்தே பிறந்தமொழி – உன்
உள்ளமும் உணர்வும் புரிந்தமொழி
எண்ணியல் என்ன மின்னியல் என்ன
எதையும் பயின்றிடச் சிறந்தமொழி – அது
இறைவன் உனக்கென வரைந்தமொழி!

தமிழினம் எய்திய பெரும்பேறு – அது
தாய்மொழி தமிழெனும் அரும்பேறு
அமிழ்தினை உரிமை அடைந்தவர் யாரும்
அருந்தா திருந்தால் அவப்பேறு – தமிழ்
அமிழ்தம் அருந்துதல் தவப்பேறு!

**இறையருட் கவிஞர் செ.சீனி நைனா முகம்மது**

[20 புள்ளி]

**அல்லது**

11. கீழ்க்காணும் கவிதையை வாசித்து, பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

**விண்மீன்**

சின்னச் சின்ன அகல்விளக்கு – கண்
    சிமிட்டி அழைக்கும் பொன்விளக்கு
எண்ணில் அடங்காப் பலகோடி! – அவை
    எண்ணெய் இல்லா மின்விளக்கு!

திரியும் கலமும் இல்லாமல் – சுடர்
    எரியும் விந்தைத் திருவிளக்கு!
முறையாய் அவற்றில் ஒளியேற்றும் – பணி
    புரியும் கதிரும் பெருவிளக்கு!

வானக் குளத்தின் மீன்களெனப் – பெயர்
    வைத்தார் முன்னோர் அழகாக!
வானத் திரையின் பொத்தலெனச் – சிலர்
    வரைந்தார் அறியாத் தனமாக!

அள்ளி முடித்த கூந்தலினை – மதி
    அழகி அவிழ்த்தாள்! விரிந்திடவே!
புல்லிக் கிடந்த அரும்புமலர் – உடன்
    பொலபொல வென்றே இறைந்தனவே!

கோலம் போடப் புள்ளிவைத்தாள் – ஒரு
    கோதை வான முற்றத்தில்!
ஆளன் அன்பாய் அழைத்திடவே – அவள்
    அக்கணம் விட்டாள் திட்டத்தினை

விண்ணை ஆளும் பேரரசன் – ஒளிர்
    பொன்னைக் குவித்துப் புரந்தனனே!
என்ன நினைத்தோ ஒருநாளில் – அவன்
    எட்டி உதைத்தான் இறைந்திடவே!

நிலவுப் பெண்ணின் பிறந்தவிழா! – உயர்
    நீள்வா னெங்கும் கொண்டாட்டம்!
குழைகள் அணிந்த பெண்களெலாம் – அவண்
    கும்மி அடிக்கும் மின்னோட்டம்!

i) இக்கவிதையில் காணப்படும் **அணிச்சிறப்புகள்** மூன்றனை விளக்கி எழுதுக. (10 புள்ளி)

ii) இக்கவிதையின் வாயிலாக கவிஞர் **விண்மீன்களை வர்ணிப்பதை** விளக்கி எழுதுக. ( 10 புள்ளி)

[20 புள்ளி]

## பிரிவு இரண்டு : நாடகம்

12. கவிச்சக்கரவர்த்தி நாடகத்தில் வெளிப்படும் **சமுதாயக் கருத்துகளை** ஆராய்க.

[ 20 புள்ளி ]

அல்லது

13. i) ஒட்டகூத்தரின் **பண்புநலன்கள்** மூன்றனை விளக்கி எழுதுக.

[ 10 புள்ளி ]

ii) கவிச்சக்ரவர்த்தி நாடகத்தின் உத்திகள் **மூன்றனை** விளக்கி எழுதுக.

[ 10 புள்ளி ]

[ 20 புள்ளி ]

## பிரிவு மூன்று : நாவல்

14. அகல் விளக்கு நாவலின் **படிப்பினைகளை** விளக்கி எழுதுக.

[ 20 புள்ளி ]

அல்லது

15. i) பாக்கிய அம்மையாரின் **பாத்திரப்படைப்பு** மூன்றனை விளக்கி எழுதுக

[ 10 புள்ளி ]

ii) மாலனின் **பண்புநலன்கள்** மூன்றனை விளக்கி எழுதுக.

[10 புள்ளி ]

## KERTAS SOALAN TAMAT